මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/55** **2025.04.17**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## அஞ்சல் வாக்கு அடையாளமிடல் - திருத்தப்பட்ட நாட்கள்

2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு அடையாளமிட குறித்தொதுக்கப்பட்டிருந்த நாட்களில் திருத்தம் கொண்டு வருவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, 2025.05.06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு அடையாளமிடல் பின்வருமாறு அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் மேற்கொள்ளப்படும்:-

| அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகம் பற்றிய விபரம் | அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுகின்ற நாள் |
|---|---|
| அனைத்து அரச நிறுவனங்கள், பொலிஸ், முப்படைகள், பாடசாலைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் | **2025.04.24,25,.28 மற்றும் 29** ஆகிய தினங்களில் |

கண்டி தலதா காட்சி விசேட கடமைகளில் ஈடுபடுத்தப்படும் இலங்கை பொலிஸ் அலுவலர்களின் அஞ்சல் வாக்கு அடையாளமிடல் கண்டி பெண்கள் உயர் பாடசாலையில் நிறுவப்படும் நிலையத்திலும், முப்படை அலுவலர்களின் அஞ்சல் வாக்கு அடையாளமிடல் அந்தந்த கட்டளையிடும் அதிகாரிகளினால் பெயர் குறிக்கப்படும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் முன்னிலையிலும் மேற்கூறிய நாட்களில் இடம்பெற வேண்டும் அத்துடன்

**2025.04.24 மற்றும் 25** ஆகிய தினங்களில் அடையாளமிடப்படும் அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய காப்புறுதிசெய்யப்பட்ட பக்கெற்றுக்கள் வாக்கு அடையாளமிடப்பட்ட அதே நாளில் அஞ்சலுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதுடன், **2025.04.28 மற்றும் 29** ஆகிய இரு நாட்களில் அடையாளமிடப்படும் அஞ்சல் வாக்குச் சீட்டு பக்கெற்றுக்கள் அந்நாட்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பணியிடம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது அறிவிக்கப்படுகிறது.

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க
தவிசாளர் தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)